T1-தாவர உலகம் மற்றும் நுண்ணுயிரிகள்
மாதிரி வினாத்தாள் II
8th Standard

**அறிவியல்**

Reg.No. :

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:05:00 Hrs | Total Marks : 27

### பகுதி - அ
9 x 1 = 9

1) இது சாறுண்ணியின் எடுத்துக்காட்டு
(a) பக்சீனியா (b) அகாரிகஸ்

2) 'அகர் அகர்' இதிலிருந்து தயாரிக்கப்படுகிறது
(a) ஜெலிடியம் (b) குளோரெல்லா

3) இது ஒரு பனை போன்ற ஜிம்னோஸ்பெர்ம்
(a) சைகஸ் (b) பைனஸ்

4) மனித சிறுநீரைத் தூய்மைப்படுத்தும் ஆல்கா
(a) ஸ்பைருலைனா (b) குளோரெல்லா

5) இருவாழ்வி எனஅழைக்கப்படுவது
(a) பிரையோஃபைட் (b) டெரிடோஃபைட்

6) நீர் மலர்ச்சியால் நீர் சூல்நிலைத் தொகுப்பு முழுவதுமாக அழைக்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு ___________ எனப்படும்.
(a) யூட்ரோபிகேசன் (b) பால் பதனிடுதல்

7) கீழ்கண்ட நுண்ணுயிரிகளில் எவை சீதபேதியை உருவாக்கும்
(a) எண்டமீபா ஹிஸ்டாலிடிக்கா (b) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (c) பிளாஸ்மோடியம் பால்சிபோரம்

8) பாலை 72° சென்டிகிரேடு வெப்பநிலையில் 30 நிமிடங்களுக்கு வெப்பப்படுத்தி உடனடியாக 12° சென்டிகிரேடுக்குக் குளிர்விக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது நுண்ணுயிரிகள் அழிக்கப்படுகிறது, பாதுகாக்கப்படுகிறது. இந்த முறையின் பெயர் என்ன?
(a) நீர்வெளியேறுதல் (b) பால் பதனிடுதல்

9) வேர்முண்டு பாக்டீரியா நைட்ரஜனை மண்ணில் நிலைநாட்டி மண்வளத்தைப் பெருக்குகிறது. இதன் பெயர் என்ன?
(a) அசட்டோபாக்டர் (b) ரைசோபியம் (c) கிளாஸ்டிரிடியம்

### பகுதி - ஆ
1 x 1 = 1

10) அ )டெரிடோபைட்டுகள் வாஸ்குலார் கற்றையுடைய பூவாத் தாவரங்கள் - காரணம் கூறுக.
ஆ)பாக்டீரியா மற்றும் பூஞ்சைக் காளானிலிருந்து நுண்ணுயிர் எதிர்ப்பொருள் பிரித்தெடுக்கப்படுகிறது. பூஞ்சையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இரண்டு நுண்ணுயிர் எதிர்ப்பொருள்களைக் கூறுக

### பகுதி - இ
7 x 2 = 14

11) கிளாஸ்டிரிடியம்உயிரினங்கள் உருவத்தில் பலதன்மை பெற்றுள்ளன. குறிப்பிட்ட அளவிலான சிற்றினங்கள் நமது கண்களுக்குத் தெரிவதில்லை. அவற்றைக் கூட்டு நுண்ணோக்கியின் மூலமே பார்க்கமுடியும். சில உயிரினங்களைக் கூட்டு நுண்ணோக்கியின் மூலமே பார்க்க முடிவதால் அவற்றை எவ்வகையான அலகினால் அளப்பீர்கள்?

12) பூஞ்சைகளில் பச்சையம் காணப்படுவதில்லை. அதனால் ஒளிச்சேர்க்கை செய்ய இயலாது. எனவே, அவை உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களையே சார்ந்துள்ளன. பூஞ்சைகளின் இருவகை உணவூட்டத்தைப் பெயரிடுக.

13) தொற்றுநோய்கள் அனைத்தும் தீங்கு விளைவிப்பவை. இவை ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகவோ/மறைமுகமாகவோ தொற்றிக் கொள்கின்றன. கீழ்க் காணப்படும் நோய்களின் பரவும் காரணமான மூலங்களை எழுதுக.
அ) காலரா, டைபாய்டு
ஆ) மலேரியா

14) சர்க்கரைக் கரைசல், ஆல்கஹால் மற்றும் கார்பன்-டைஆக்சைடாக மாற்றம் அடைகிறது. இந்நிகழ்விற்கு நொதித்தல் என்று பெயர். எவ்வகையான நுண்ணுயிரி இத்தகைய நிகழ்விற்குக் காரணம் என கூறுக.

15) கீழ்க்காணும் நுண்ணுயிரியின் அமைப்பினைப் பார்த்து அதன் பெயரை எழுதவும்.



பாக்டீரியாவின் படம் வரைந்து கீழ்க்கண்ட பாகங்களைக் குறிக்கவும்.
அ) கசை இழை ஆ) பைலங்கள் இ) செல்சுவர்
ஈ) சைட்டோபிளாசம் எ) புறச்சவ்வு

16) இன்றைய உலகில் பல தொழிற்சாலைகள் நுண்ணுயிரிகளின் செயல்பாடுகளைச் சார்ந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஆக்சாலிக் அமிலம். அஸ்பெர்ஜில்லஸ் நைகர் என்ற பூஞ்சையின் நொதித்தல் செயலால் தயாரிக்கப்படுகிறது. இதைப்போல் பாக்டீரியாவைப் பயன்படுத்தி தயாரிக்கும் பொருள்கள் இரண்டனைக் கூறுக. அவற்றைத் தயாரிக்க உதவும் பாக்டீரியாவின் பெயரினையும் குறிப்பிடுக.

17) விவசாயிகளின் விளைநிலங்கள் மற்றும் தோட்டங்களைப் பாக்டீரியா, பூஞ்சைகள் மற்றும் வைரஸ்கள் பெருமளவில் தாக்கித் தீங்கிழைப்பதால் பயிர்களுக்கு நோய்கள் ஏற்படுகின்றன. ஏதேனும் ஒரு பாக்டீரியா, பூஞ்சை மற்றும் வைரஸ் நோய்களை எழுதுக.

### பகுதி - ஈ
1 x 3 = 3

18) நான் நிலத்தில் வாழும் திறனைப்பெற்ற பூவாத்தாவரம். எனக்கு வேர், தண்டு, இலை உள்ளன. நான் ஸ்போர்கள் மூலம் இனப்பெருக்கம் செய்கிறேன். என்னிடம் மலர்கள் இல்லை. நான் யார்? விவரிக்க.

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in